


**10.11. 2024**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஜார்கண்ட் மகராஷ்டிர மாநிலங்களின் சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரத்தில் அரசியல் தலைவர்கள் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

2. மின்சார வாகன உபயோகத்தின் மூலம் சுற்றுசூழல் மாசுபாட்டை குறைக்கலாம் என்று மத்திய மின்துறை அமைச்சர் திரு.மனோகர் லால் தெரிவித்துள்ளார்.

3. விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் 350 கோடி ரூபாய் செலவில் சிப்காட் வளாகம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. வைகை அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டதை அடுத்து 5 மாவட்ட கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

5. இந்திய - தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையேயான இரண்டாவது 20-20 கிரிக்கெட் போட்டி **Gqeberha**-வில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறுகிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

***********

<u>தேர்தல்</u>

ஜார்கண்ட் மகராஷ்டிர மாநிலங்களின் சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரத்தில் அரசியல் தலைவர்கள் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு.நரேந்திரமோடி ஜார்கண்ட் மாநிலத்தில் இன்று சந்திப்பூர், கர்வா மற்றும் ராஞ்சியில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

ஜார்கண்ட் மாநிலத்தில் வரும் 13ஆம் தேதி நடைபெறும் முதற்கட்ட சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை மாலையுடன் நிறைவடைய

உள்ள நிலையில் ஜார்கண்ட் முக்தி மோர்சா மற்றும் ராஷ்ட்ரிய ஜனதாதள் கட்சி தலைவர்களும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்

இதனிடையே மகராஷ்டிர மாநில சட்டப்பேரவை தேர்தல் ஒரே கட்டமாக வரும் 20ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில் பிஜேபியின் தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் மூத்த தலைவரும், உள்துறை அமைச்சருமான திரு.அமித்ஷாவும்,

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை அக்கட்சி தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கேவும் இன்று மும்பையில் வெளியிட்டனர்.

இதனிடையே கேரள மாநிலம் வயநாடு மக்களவை தொகுதியில் வரும் புதன்கிழமை நடைபெறும் இடைத்தேர்தலுக்கான பிரச்சாரமும் நாளை மாலையுடன் ஓய்கிறது.

***********

<u>மனோகர் லால்</u>

மின்சார வாகன உபயோகத்தின் மூலம் சுற்றுசூழல் மாசுபாட்டை குறைக்க முடியும் என்று மத்திய மின்துறை அமைச்சர் திரு.மனோகர் லால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று மின்சார வாகன சேவை திட்டத்தை தொடங்கிவைத்து பேசிய அவர் தொழில்துறை, கட்டுமானம், போக்குவரத்து உள்ளிட்டவற்றால் ஏற்படும் மாசுபாட்டை குறைக்க அந்தந்த துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

முன்னதாக மின்சார வாகன பேரணியையும் அமைச்சர் தொடங்கிவைத்தார்.

***********

<u>சஞ்சீவ் கண்ணா</u>

உச்ச நீதிமன்றத்தின் 51ஆவது தலைமை நீதிபதியாக சஞ்சீவ் கண்ணா நாளை பொறுப்பேற்கிறார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவருக்கு பதவி பிரமாணம் செய்து வைக்கிறார்.

தற்போதைய தலைமை நீதிபதி **D.Y.** சந்திசூட் இன்று ஓய்வுபெறுவதை அடுத்து சஞ்சீவ் கண்ணா புதிய தலைமை நீதிபதியாக நாளை பதவி ஏற்கிறார்.

***********

<u>முதலமைச்சர்</u>

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் 350 கோடி ரூபாய் செலவில் சிப்காட் வளாகம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

விருதுநகரில் இரண்டாவது நாளாக இன்றும் கள ஆய்வு மேற்கொள்ளும் முதலமைச்சர் 77 கோடியே 11 லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்ட புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை திறந்துவைத்து பேசினார்.

பட்டாசு தொழிற்சாலை விபத்துகளில் உயிரிழப்போரின் குழந்தைகளுக்கு உயர்கல்வி வரையிலான கல்வி செலவை அரசே ஏற்கும் என்றார்.

வாய்ஸ்

41 கோடி ரூபாய் மதிப்பில் மாவட்டத்தில் உள்ள நீர்நிலைகள் சீரமைக்கப்படும் என்று கூறிய அவர் 23 கோடி ரூபாய் செலவில் அணைகள் மேம்படுத்தப்படும் என்றார்.

காரியாப்பட்டி, திரிசுழி வட்டங்களில் உள்ள கண்மாய்கள் 17 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

10 கோடி ரூபாய் மதிப்பில் வத்திராயிருப்பு பூங்கா மேம்படுத்தப்படும்,

சிவகாசியில் 15 கோடி ரூபாய் செலவில் நவீன கூட்டரங்கம் அமைக்கப்படும்,

விருதுநகரில் 25 கோடி ரூபாய் செலவில் சாலைகள் மேம்படுத்தப்படும் என்பன உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளையும் முதலமைச்சர் வெளியிட்டார்.

தொடர்ந்து 57 ஆயிரத்து 556 பயனாளிகளுக்கு 417 கோடி ரூபாய் மதிப்பிலான நல திட்ட உதவிகளை வழங்கிய முதலமைச்சர் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களையும் பெற்றுக்கொண்டார்.

***********

<u>மதிவேந்தன்</u>

புறநகர் மற்றும் நகரப்பகுதி வழிதடங்களில் பேருந்து சேவைகள் தேவையான அளவில் இயக்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும் என்று மாநில ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் வலியுறுத்தியுள்ளார்.

நாமக்கல் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து இன்று தொடங்கப்பட்ட பேருந்து போக்குவரத்தை ஆய்வு செய்த அவர், பயணிகளின் தேவைக்கேற்ப பேருந்துகள் இயக்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

***********

<u>அமைச்சர்கள்</u>

தமிழகத்தில் உள்ள 54 அரசு ஆரம்ப பள்ளிகளில் ஓடி விளையாடு உடற்கல்வி திட்டத்தை மாநில அமைச்சர்கள் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு. பொன்முடி ஆகியோர் இன்று தொடங்கிவைத்தனர்.

விழுப்புரம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் இத்திட்டத்தை தொடங்கிவைத்து பேசிய திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆரம்ப கல்வியில் மாணாக்கர் நல்ல உடற்தகுதி மற்றும் ஒழுக்கத்துடன் வளர இத்தகைய பயிற்சிகளின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

இத்திட்டத்தின் கீழ் ஜிம்னாஸ்டிக், மல்லர்கம்பம், சிலம்பம், யோகா உள்ளிட்ட 5 வகையான உடற்கல்வி பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளதாக கூறினார்.

***********

ஐஐடி

உலக பல்கலைகழகங்களின் தர வரிசை பட்டியலில் முதல் 100 இடங்களில் 7 இந்திய நிறுவனங்கள் இடம்பெற்றிருப்பது இந்திய கல்வி நிறுவனங்களின் அளப்பரிய வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாக மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இப்பட்டியலில் டெல்லி ஐ.ஐ.டி 44ஆவது இடத்தை பெற்றுள்ளது.

சென்னை, மும்பை, காரக்பூர் மற்றும் கான்பூர் ஐ.ஐ.டி-கள் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

***********

கிராம சபை

தமிழகம் முழுவதும் கிராம சபைக்கூட்டங்கள் வரும் 23ஆம் தேதி நடைபெற உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

கடந்த ஒன்றாம் தேதி நடைபெற இருந்த கிராம சபைக்கூட்டம் நிர்வாக காரணங்களுக்காக ஒத்திவைக்கப்பட்டதை அடுத்து இந்நடவடிக்கை.

***********

வருமான வரி துறை

வருமான வரித்துறை தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் திருச்சியில் நாளை நடைபெற உள்ளதாக மாவட்ட வருமான வரித்துறை கூடுதல் ஆணையர் திருமதி நித்யா தெரிவித்துள்ளார்.

இதில் வருமான வரி சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட உள்ளது.

வேளாண் கூட்டுறவு சங்கங்கள், தொழிலாளர் சிக்கன நாணய சங்கங்கள் மற்றும் நகர்புற கூட்டுறவு வங்கி அதிகாரிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

***********

மீனவர்கள்

கச்ச தீவு அருகே மீன்பிடித்து கொண்டிருந்த 23 ராமேஸ்வரம் மீனவர்களையும், அவர்களது 3 விசைபடகுகளையும் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் பிடித்து சென்றுள்ளனர்.

இவர்கள் ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு யாழ்பாணம் சிறைக்கு கொண்டு செல்லப்பட உள்ளனர்.

இதனிடையே இம்மீனவர்களை விடுக்க மத்திய மாநில அரசுகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீனவ சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

***********

இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலை பள்ளிகளில் மாணாக்கரின் கற்றல் திறனை ஊக்குவிக்கும் வகையில் "யாவரும் கேளீர்" திட்டம் வரும் 14ஆம் தேதி முதல் தொடங்கப்பட உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் குறித்த பயிற்சி மாவட்டத்தில் உள்ள 67 பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் இலுப்பை, வாகை, பாதாம் உள்ளிட்ட 30 ஆயிரம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட திட்ட இயக்குனர் ஜெயசுதா தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் ஆட்டுக்கொல்லி நோய் தடுப்பூசிகள் நாளைமுதல் 30 நாட்களுக்கு மாவட்டத்தில் உள்ள 2 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆடுகளுக்கு செலுத்தப்படுகிறது.

மதுரை மாவட்ட விவசாயிகள் வரும் 15ஆம் தேதிக்குள் ரபி பருவ பயிர் காப்பீடு செய்ய விண்ணப்பிக்கலாம் என்று வேளாண் இணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

***********

தண்ணீர் திறப்பு

தேனி மாவட்டம் வைகை அணையிலிருந்து பாசனத்திற்காக வினாடிக்கு மூவாயிரம் கன அடி தண்ணீர் இன்று திறக்கப்பட்டது.

இதனையடுத்து தேனி மதுரை திண்டுக்கல் சிவகங்கை ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்ட கரையோர மக்களுக்கு நீர்வளத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

நீலகிரி மாவட்டம் காட்டுக்குப்பை எமரால்டு அணை பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் குந்தா நீர் மின் நிலைய கட்டுமான பணிகளுக்காக அணையிலிருந்து இன்று தண்ணீர் திறக்கப்படுவதை ஒட்டி கரையோர மக்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

***********

சதயவிழா

மாமன்னன் ராஜராஜ சோழனின் ஆயிரத்து 39ஆவது சதய விழாவை ஒட்டி ராஜராஜ சோழனின் திருவுருவ சிலைக்கு அரசு சார்பில் தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி பிரியங்கா பங்கஜம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்டோர் இன்று, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து பெருவுடையார் பெரியநாயகி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெறுகின்றன.

***********

திருமூர்த்திமலை

கோவை திருமூர்த்தி மலை உலக சமாதான அறக்கட்டளை சார்பில் நாளைகாலை 11 மணி 11 நிமிடங்களுக்கு ஒரு நிமிட அமைதி கடைபிடிக்கப்படுகிறது.

உலக நாடுகளிடையேயும் மக்களிடையேயும் அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் 8 கோடிக்கும் அதிகமானோர் இணையவழியில் பங்கேற்க உள்ளதாக இந்த அறக்கட்டளையின் தலைவர் குருமகான் கூறியுள்ளார்.

போரில்லா உலகை ஏற்படுத்த இது வழிகோலும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

***********

டெல்லி கணேஷ்

பிரபல திரைப்பட நடிகர் டெல்லி கணேஷ் சென்னையில் நேற்றிரவு காலமானர்.

அன்னாருக்கு வயது 81.

தமிழ் தெலுங்கு மலையாளம் உள்ளிட்ட மொழிகளில் 400க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் மற்றும் சின்னத்திரை தொடர்களிலும் நடித்துள்ள அவர், தமிழக அரசின் கலைமாமணி உள்ளிட்ட விருதுகளை பெற்றுள்ளார்.

அன்னாரது மறைவிற்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

***********

வானிலை

தென்மேற்கு வங்க கடல் பகுதிகளின் மேல் நிலவிய வளிமண்டல கீழடுக்கு சுழற்சி அதே பகுதியில் நிலவுகிறது.

இதன் காரணமாக அடுத்த 36 மணி நேரத்தில் தென்மேற்கு வங்க கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக கூடும் என்றும், இது மேற்கு திசையில் அடுத்த இரண்டு நாட்களில் தமிழக இலங்கை கடற்பகுதியை நோக்கி நகரக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவீத்துள்ளது.

இதன்காரணமாக நாளை நாகை, மயிலாடுதுறை, மாவட்டங்களில் கன மழைக்கு வாய்ப்புள்ளதாக இம்மையம் கூறியுள்ளது.

***********

கிரிக்கெட்

இந்திய - தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையேயான இரண்டாவது 20-20 கிரிக்கெட் போட்டி புஙநடிநசாய-வில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறுகிறது.

நான்கு போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

***********

ஹாக்கி

ஆசிய மகளிர் ஹாக்கி சேம்பியன்சிப் போட்டிகள் பிஹார் மாநிலம் ராஜ்கிரில் நாளை தொடங்குகிறது.

இந்தியா, சீனா, ஜப்பான், மலேசியா, தாய்லாந்து, கொரியா ஆகிய நாடுகள் பங்கேற்கும் இப்போட்டிகள் வரும் 20ஆம் தேதி வரை நடைபெறுகின்றன.

***********

ஸ்குவாஷ்

சிட்னியில் நடைபெற்ற ஸ்குவாஷ் மகளிர் ஒற்றையர் சேம்பியன் பட்டத்தை இந்தியாவின் அனாஹத் சிங் கைப்பற்றியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆட்டத்தில் அவர் ஹாங்காங்கின் ஹெலன் டேங்கை 8-11 11-6 11-3 11-4 என்ற செட்களில் வென்றார்.

***********